**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

**MCOP.No.176/2018**

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் -19ம் நாள் செவ்வாய்கிழமை **ம.சா.1**-ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) இளநிலை உதவியாளர் திருமதி.கே.ஏழிசை என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ஆயிஷா பீவி | **வட்டம்** | சிவகங்கை |
| **க.பெ** | ஜாகீர் உசேன் | **சமயம்** | முஸ்லீம் |
| **கிராமம்** | இளையான்குடி | **வயது** | 45 |

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்தினை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனு மற்றும் நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்கியதாக நான் கூறியுள்ள பாலிசியின் பாலிசி எண்ணை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்கியதாக நான் கூறியுள்ள பாலிசியின் நகலை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு இந்த 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தால் விபத்து சமயத்தில் காப்பீடு ஒப்பந்தம் எதுவும் வழங்கப்படவில்லை என்றாலும் எனவே தான் மேற்படி காப்பீட்டினை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை எங்களால் தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு இந்த 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தால் விபத்து சமயத்தில் காப்பீடு ஒப்பந்தம் எதுவும் வழங்கப்படவில்லை என்பதால் இந்த மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடு ஏதும் கிடைக்கத்தக்கதாக இருந்தால் அதனை 1ம் எதிர்மனுதாரர் மட்டுமே கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. என் மகன் விபத்திற்கு முன்பாக வேலை பாத்ததனையும் அதன்மூலம் வருமானம் ஈட்டி வந்ததனையும் நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் எதையும் இந்த

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகன் தான் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் இருசக்கர வாகனத்தை இயக்கி விபத்து ஏற்படுத்தினார் என்றாலும் எனவே இந்த மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னாலும் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமான மாதிரி வரைப்படத்தினை நான் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மாதிரி வரைப்படத்தினை தாக்கல் செய்யும் பட்சத்தில் எனது மகனின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று தெரிந்துவிடும் என்பதால் தான் மாதிரி வரைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் மகன் வேலைபார்த்து வருமானம் ஈட்டி வந்ததாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சொன்னால் சரியல்ல. இந்த மனுவில் நாங்கள் கோரியுள்ள இழப்பீடு தொகை மிகவும் அதிகம் என்று சொன்னால் சரியல்ல.